கண்டி மாநகர சபை - 2023

-------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கண்டி மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள மாநகர சபை கட்டளை சட்டத்தின் (252 அதிகாரம்) 219 பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

கண்டி மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை வெளியிடவில்லை. இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான முக்கியத்துவம் காரணமாக, இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றை வழங்க போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ

தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மாநகர சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம், முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வாகன மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம், 06 வாகனங்களின் பெறுமதி ரூபா 129,450,000 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அட்டவணையில் புதிய மதிப்பீட்டுப் பெறுமதியை உள்ளடக்கியதென. | கணக்கு மற்றும் அட்டவணைகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில், அன்பளிப்பாக கிடைத்து ரூபா 8,000,000 இற்கு மதிப்பிடப்பட்டிருந்த தீயணைப்பு வண்டியொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பிடப்பட்டு இருக்காததால், கணக்கீடு செய்யவில்லையென. | இத் தீயணைப்பு வண்டி 2022 ஜுன் மாதம் மாநகர சபைக்கு கிடைத்து 2023 ஒக்டோபர் மாதம் மதிப்பிட்டிருந்ததால் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில், கொஹாகொட கழிவுத் தொட்டியில் கழிவுப் பொருட்களை வேறாக்கும் இயந்திரத்தை இஸ்தாபித்தல் மற்றும் அதற்காக நிர்மாணித்த கட்டிடத்திற்காக செலவிட்டிருந்த ரூபா 32,352,015 மற்றும் ரூபா 5,800,000 செலவில் கொள்வனவு செய்திருந்த வாகனங்களின் திணிவை அளக்கும் இயந்திரத்தின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | வேலைகள் மற்றும் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால், கணக்கீடு செய்யவில்லையென. | மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்தில் நிறுத்தற் பணமும் விடுவிக்கப்பட்டு இருந்ததால், இயந்திரத்தை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | பெற சவி கொன்கிரீட் உற்பத்தி கருத்திட்டத்தின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலவிய ரூபா 6,334,711 ஆன இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதென. | சபைக்குரிய அனைத்து இருப்புக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி கழிவுப் பொருள் முகாமைத்துவ கருத்திட்டத்தில் காணப்பட்ட இயற்கை பசளை இருப்பு மற்றும் பிளாஸ்டிக் துண்டு இருப்புக்களின் பெறுமதி ரூபா 1,742,538 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில சீராக்க நடவடிக்கை எடுப்பதென. | இருப்பை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 273,416,649 ஆன போதும், அதனை ரூபா 138,656,299 ஆக கணக்கீடு செய்ததால் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 134,760,350 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக எதிர்காலத்தில் கண்டறிய நடவடிக்கை எடுப்பதென. | முத்திரை கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு வீதவரி பில்லிடல் ரூபா 374,293,021 ஆன போதும், அதனை ரூபா 380,360,476 ஆக கணக்கீடு செய்ததால் வீதவரி ரூபா 6,067,455 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | பின்னர் பதில் வழங்க நடவடிக்கை எடுப்பதென. | வீதவரி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய ரூபா 27,770,853 ஆன வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் கைத்தொழில் வரி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட வழக்கு தாக்கல் செய்வதென. | பெற வேண்டிய அனுமதிப் பத்திர கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | காணி குத்தகைகளின் கடந்த ஆண்டிற்குரிய செம்பையாக்கல் கூட்டுத் தொகை ரூபா 745,188 தொகை திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட வேண்டிய போதும், ஆண்டின் பில்லிடலில் இருந்து குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், காணி வரி முற்பெறுவனவு ரூபா 2,891,041 தொகை முற்பெறுவனவு கணக்கிற்கு செலவு வைக்காது பெறவேண்டிய காணி வரி மீதியிலிருந்து குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2012 ஆண்டிலிருந்து ஏற்பட்ட வித்தியாசத்தை திருத்தும் போது, மீளாய்வாண்டில் பில்லிடலிற்கு கூட்டியதென. | கடந்த ஆண்டுகளின் வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஒ) | கடந்த ஆண்டில், சஹஸ் பூங்கா வளவை குத்தகை வழங்கி இருந்ததுடன், இவ் வளவிற்காக கிடைத்திருந்த மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம், கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை ரூபா 3,448,333 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பின்னர் பதில் வழங்க நடவடிக்கை எடுப்பதென. | பெற வேண்டிய வாடகை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மீளாய்வாண்டில் காசாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5,157,042 நிதி ஒழுங்கீனங்கள் பெற வேண்டிய மீதிகளாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நி.பி. விசாரணை முடிவடையாததால், கணக்கீடு செய்யாததுடன், வெளிப்படுத்தல் மாத்திரம் செய்யப்பட்டுள்ளதென. | நிதி பற்றாக்குறை கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | கடை வாடகை மற்றும் டென்டர் பணத்தை அறவிடாது போலியாக ஆவணங்களை மாற்றி மேற்கொண்டிருந்த ரூபா 23,315,017 ஆன நிதி ஒழுங்கீனங்களை கணக்குகளில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | இது தொடர்பாக போலிஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன், நி.பி. விசாரணை முடிவடையவில்லையென. | கடை வாடகை மற்றும் டென்டர் நிதி ஒழுங்கீனங்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (க) | மாநகர சபையின் சேவையை விட்டுச் செல்ற கட்டளை விநியோகிக்கப்பட்ட ஊழியர் ஒருவரிற்காக 49 மாதங்களிற்கு ரூபா 1,792,460 சம்பளம் செலுத்தி மேற்கொண்ட நட்டத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | இது தொடர்பாக போலிஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன், நி.பி. விசாரணை முடிவடையவில்லையென. | அறவிட வேண்டிய நட்டத்தை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (கா) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு போகம்பர கால்வாய் அபிவிருத்தி செய்வதற்காக மாவட்ட செயலகத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 29,237,719 தொகை கணக்கீடு செய்யப்படவில்லை. | இத் தொகை கைத்தொழில் திணைக்களத்தினால் 2024 ஆண்டிற்கு முன்கொண்டு சென்றிருக்கவில்லையென. | பெற வேண்டிய நிதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (கி) | 2019 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையான காலத்தினுள் உடன்படிக்கை செய்யாது மற்றும் வேலை ஆரம்பிக்காது 414 கருத்திட்டங்களிற்கு உரியதாக ரூபா 323,754,338 தொகை தவறுகளுடன் கடன்கொடுனரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், வேலை ஆரம்பிக்க தாமதித்துள்ளதென. | கடன் கொடுனர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (கீ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு உன்படிக்கை செய்து வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 108,706,817 ஆன 02 கருத்திட்டங்கள் கடன்கொடுனரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இத் தொகை கைத்தொழில் திணைக்களத்தினால் 2024 ஆண்டிற்கு முன்கொண்டு சென்றிருக்கவில்லையென. | கடன் கொடுனர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 06 சொத்து விடயங்கள் மற்றும் 05 பொறுப்பு விடயங்களிற்குரிய மீதிகள் அதற்குரிய அட்டவணைகளில் குறிப்பிடப்படும் மீதிகளுடன் இணக்கம் | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதிகளை சரி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும் போது ரூபா 212,191,924 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிலையான சொத்துக்களின் கூட்டத் தொகை ரூபா 2,344,906,129 ஆன போதும், மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கின் மற்றும் மூலதனத்திற்கு அன்பளிப்பிலிருந்து பங்களிக்கும் கணக்கின் கூட்டுத் தொகை ரூபா 1,283,206,517 ஆனதன் காரணமாக ரூபா 1,061,699,512 ஆன வித்தியாசமானது. | ஏதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதிகளை சரி செய்ய வேண்டும். |

**1.7 இணக்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம்** | | | |
| | 16 (2) பிரிவு | மீளாய்வாண்டிற்காக செயலாற்றுகை அறிக்கையொன்றை சமர்ப்பித்திருக்கவில்லை. | செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ) மாநகர சபை கட்டளை சட்டம் (252 அதிகாரம்)** | | | |
| (i) 247(அ) மற்றும் (ஆ) பிரிவு | மாநகர சபையின் அனுமதிப்பத்திர மற்றும் வியாபார வரி கட்டணம் அறவிட பிரசுறிக்கப்பட்ட வர்த்தமானியின் சட்ட அறிவுறுத்தல்களை விஞ்சி வருடாந்த பெறுமதி ரூபா 5,000 இற்கும் ரூபா 75,001 இற்குமிடையிலான வீச்சளவை திருத்தி வர்த்தமானி அறிவித்தல் பிரசுறிக்கப்பட்டிருந்தது. | வியாபார நிலையத்திற்கு அந்த நிலையத்தின் வருடாந்த பெறுமதி, அந்த கைத்தொழிலின் வியாபார விற்பனை மற்றும் இலாபம் மற்றும் அந்த கைத்தொழிலை மேற்கொண்டு செல்கையில் வழங்கப்படும் பண்டங்களின் மற்றும் சேவைகளின் அத்தியவசிய தன்மையை கவனத்திற் கொண்டு ஒவ்வொறு ஆண்டும் திருத்தத்துடன் அனுமதிப்பத்திர சுழற்சியை தயாரித்து அரச வர்த்தமானியில் பிரசுறித்து வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வரி கைத்தொழில் வரிக் கட்டணம் கணக்கிட்டு அறவிடப்படுவதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டும் |
| (ii) 247(அ) மற்றும் (ஆ) பிரிவு | வருடாந்த பெறுமதி ரூபா 1,500 வை விஞ்சிய 552 சந்தர்ப்பங்களில் ரூபா 500 இலிருந்து ரூபா 1,900 வரை கட்டணம் அறவிட்டு மாநகர நிதியத்திற்கு ரூபா 774,800 நட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (iii) 266 (அ) பிரிவு | கடந்த ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 57,678,281 ஆன 05 வருமான விடயங்களில் நிலுவை வருமானம் பதிவழிக்கப்பட்டிருந்த போதும், அதற்காக விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள ஆளுனர் அவர்களிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், இது வரை அங்கீகாரம் கிடைக்கவில்லையென. | நிலுவை வருமானம் பதிவழிக்கப்பட முன்னர் முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| **(இ) 1946 இன் 12 இலக்க களியாட்ட வரி கட்டளைகள் சட்டம்** | | | |
| 15 ஆம் பிரிவு | 2023 ஆண்டில் நடாத்திய 02 எசல மேலா விழாக்களிலும் உள்வாரியாக நடத்திய கண்காட்சிகளில் பிரவேச பத்திரங்கள் இலட்சினை பொரிக்கப்பட்டு இருக்காததுடன், வரி அறிவிடப்படாது ரூபா | சட்டத்தில் ஒரு சில விளக்கங்கள் தெளிவற்றதால், இதற்கு முன்னர் பின்பற்றிய வாறு இம் முறையும் களியாட்ட வரி அறவீடு செய்யப்பட்டதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் கட்டணம் அறவிட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 1,604,950 பெறுமதியான 86,000 பிரவேச பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டு இருந்தன. | | |
| (ஈ) | **1982 இன் 04 இலக்க மற்றும் 1984 இன் 44 இலக்க சட்டங்களால் திருத்திய 1978 இன் 41 இலக்க நகர அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 28(அ)(3) பிரிவு** | அனுமதியற்ற நிர்மாணங்களை உடைத்தகற்ற நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த 10 வழக்கு நடவடிக்கைகளிற்கு உரியதாக உடைத்தகற்றும் கட்டளை கிடைத்துள்ள போதும், 02 ஆண்டு காலம் கடந்துள்ள போதும், மீளாய்ண்டு இறுதி வரை நீதிமன்ற கட்டளையை செயற்படுத்தி இருக்கவில்லை. | உடைத்து அகற்றவில்லையென ஏற்றுக் கொள்வதுடன், பரீட்சித்துப் பார்த்து குறித்த செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | நீதிமன்ற கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (உ) | **இலக்கம் 1249 மற்றும் 2002 ஆகஸ்ட் 08 திகதிய வர்த்தமானியில் பிரசுறித்த கண்டி மாநகர சபையின், அங்கீகார துணைச் சட்டம்** | | | |
| | 01 அத்தியாயத்தின் II ஆம் பகுதியின் 14(02) | அன்றாடம் கிடைக்கும் பணம் மற்றும் காசோலைகள் அடுத்த நாள் வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், காசாளரிற்கு 2022 ஜூலை 01 தகிதி முதல் 2023 செப்டம்பர் 26 வரையான காலத்தினுள் கிடைத்திருந்த ரூபா 89,000 முதல் ரூபா 3,925,423 வரை வீச்சளவான பணம் 01 நாள் முதல் 30 நாட்கள் கால தாமதத்துடன் வங்கியில் இடப்பட்டிருந்தது. | தாமதித்து வங்கியில் இடப்பட்டுள்ளது. தற்போது அதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகார துணைச் சட்ட ஏற்பாடுகளின் மீது தாமதமின்றி பணம் விங்கியில் இடப்பட வேண்டும். |
| **(ஊ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம்** | | | |
| | நி.பி. 396(ஈ) | விநியோகித்த போதும், விங்கியில் வைப்புச் செய்யப்படாத செல்லுபடியாகும் காலத்தை விஞ்ஞிய ரூபா 1,736,878 பெறுமதியான 67 காசோலைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**(எ) சுற்றறிக்கைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2016 திசெம்பர் 29 இன் 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | மாநகர சபைக்கு சொந்மான 150 வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டு பரிசோதனையை நீண்ட காலமாக செய்திருக்கவில்லை. | 02 பிரிவுகளில் எரிபொருள் பயன்பாட்டு பரிசோதனை பூர்த்தியாகியுள்ளதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | 2016 மார்ச் 17 இன் 2016/03 இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கை | | | |
| | 05 பிரிவின் (I) பந்தி | கடையறைகளை 05 ஆண்டுகளின் 05 ஆண்டுகளிற்கு மதிப்பீடு செய்ய வேண்டியதுடன், ஜோஜ் ஈ. த சில்வா வியாபார கட்டிடத் தொகுதியில் 2013 ஆண்டின் பின்னர் 2019 ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதும், 2019 ஜுன் 27 திகதி முதல் 2023 மே 30 திகதி வரை 145 கடையறைகளில் கடை வாடகை பில்லிடப்பட்ட போதும், ரூபா 43,544,737 கடை வாடகை அறவிடப்படாது 2023 பெப்ரவரி 28 இன் 08/40 இலக்க சபை தீர்மானம் மூலம் அவ் வாடகையை பதிவழிக்க தீர்மானித்திருந்தது. | அங்கீகாரத்திற்கு ஆளுனர் அவர்களிற்கு அனுப்பியுள்ளதால், அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்து மதிப்பீட்டு குத்தகை வாடகையை அறவிட வேண்டும். |
| (iii) | 10 பிரிவு | ஜோஜ் ஈ. த சில்வா வியாபார கட்டிடத் தொகுதியின் 21 கடையறைகளின் குத்தகைதாரர்கள் ரூபா 21,000 இற்கும் ரூபா 55,650 இற்கும் இடையிலான மாதாந்த வாடகை தொகைக்கு 21 கடையறைகளை உப குத்தகை வழங்கியிருந்தனர். | உப குத்தகை வழங்கியுள்ளதாக இனங்கண்ட சட்ட ரீதியான குத்தகைதாரர்களிற்கு உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக எழுத்து மூலம் அறிவித்துள்ளதென. | உப குத்தகை வழங்கியுள்ள கடையறைகளிற்காக உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்ட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 718,210,138 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 627,188,401 ஆனது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியில் பேணிச் செலலும் 02 நடைமுறை கணக்குகளில் மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்திற்குரிய வங்கி இணக்க கூற்றின் பிரகாரம், கூட்டுத் தொகை ரூபா 7,987,491 ஆன இனங்காணாத வைப்புக்கள், கூட்டுத் தொகை ரூபா 514,947 ஆன இனங்காணாத கொடுப்பனவு மற்றும் வைப்பு செய்துள்ள போதும், நீண்ட காலமாக மாற்றப்பட்டிருக்காத ரூபா 1,466,987 தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | விரைவில் இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுப்பதென. | மீதிகளை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டு இருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 1,313,439,000 | 1,229,426,926 | 1,195,785,986 | 721,296,042 | 990,201,000 | 882,283,117 | 820,914,617 | 589,194,812 |
| (ii) | வாடகை | 295,938,000 | 256,913,388 | 214,419,265 | 181,080,589 | 285,829,000 | 253,894,168 | 233,732,302 | 131,724,666 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 41,001,000 | 37,926,246 | 37,926,246 | -- | 40,305,000 | 34,770,109 | 34,770,109 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 850,539,000 | 830,043,693 | 840,903,061 | 304,610,238 | 908,667,000 | 746,595,031 | 592,026,297 | 280,141,845 |
| | மொத்தம் | 2,500,917,000 | 2,354,310,253 | 2,289,034,558 | 1,206,986,869 | 2,225,002,000 | 1,917,542,425 | 1,681,443,325 | 1,001,061,323 |

### 2.3.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வருமான சேகரிப்பு** | | |
| | அனைத்து வருமான மூலங்களினதும் கடந்த ஆண்டு திசெம்பர் 31 திகதியன்று காணப்பட்ட நிலுவை ரூபா 1,001,061,323 ஆனதுடன், மீளாய்வாண்டு இறுதியில் அது ரூபா 1,206,986,869 ஆன காரணத்தால் நிலுவை வருமானங்களின் வளர்ச்சி 20 சதவீதமாகும். | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதென | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும |
| **(ஆ)** | **வீதவரி மற்றும் வரி** | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா 205,363,030 ஆனதுடன், அலகொன்றில் நிலுவை ரூபா 500,000 இனை விஞ்சியிருந்த 30 வீதவரி அலகுகளிலிருந்து ரூபா 36,846,801 நிலுவையை மாநகர சபை கட்டளை சட்டத்தின் (252 அதிகாரம்) 256 பிரிவின் பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ)** | **வாடகை** | | |
| (i) | இலக்கம் 1249 மற்றும் 2002 ஆகஸ்ட் 09 திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட மாநகர சபையின், துணை சட்டம் 13(1) பிரகாரம், நடவடிக்கை எடுத்து குத்தகை வழங்கியிருந்த 725 காணிகளிலிருந்து ரூபா 144,543,178 ஆன குத்தகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுப்பதுடன், பொருத்தமான சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதென. | நிலுவை குத்தகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் மத்திய சந்தையின் 07 இறைச்சிக் கடைகளிலிருந்து ரூபா 6,247,952 ஆன டென்டர் தொகையை காலரீதியாக அறவிட்டிருக்கவில்லை. | இறைச்சிக் கடைகளை உரிய காலத்தில் டென்டர் கோரி உடன்படிக்கை செய்ய நடவடிக்கை எடுத்து டென்டர் தொகையை காலரீதியாக அறவிடவும் நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை கடை வாடகையை அறவிட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் போகம்பர வியாபார கட்டிடத் தொகுதியின் 54 கடைகளிலிருந்து ரூபா 7,253,371 ஆன நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பரீட்சித்து அறிக்கையிடுவதற்காக முகாமைத்துவ குழுவினால் சபையொன்றை நியமித்துள்ளதென. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | புகையிரத பாதை புதிய சந்தை கட்டிடத் தொகுதியின் மேல் மாடியில் 263 குத்தகைதாரர்களிற்கு இடவசதி குத்தகைக்கு வழங்கியதில், 2015 முதல் 2023 திசெம்பர் 31 வரை கூட்டுத் தொகை ரூபா 24,614,082 ஆன குத்தகை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டில் பணம் செலுத்த நடவடிக்கை எடுத்த 92 இடவசதி உரிமையாளர்களிற்கு எதிர்காலத்திலும் அந்த இடத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்ல சந்தர்ப்பமளித்து எஞ்சிய 171 பேர்களின் நிலுவை தொகையை பதிவழிக்க சபை தீர்மானமொன்றை எடுத்துள்ளதென. | குத்தகை தொகையை காலரீதியாக அறவிட வேண்டும். |

**(ஈ) அனுமதிப்பத்திர கட்டணம்**

| | | |
|---|---|---|
| அனைத்து வியாபார நிலையங்களும் 2023 மார்ச் 31 இற்கு முன்னர் அனுமதிப்பத்திர கட்டணத்தை செலுத்தி வியாபாரத்தை நடாத்திச் செல்ல வேண்டிய போதும், 2023 திசெம்பர் 31 வரை ரூபா 27,770,853 தொகையை செலுத்தாதிருந்த போதும், மாநகர சபை கட்டளை சட்டத்தின் (252 அதிகாரம்) 274(இ) பிரகாரம் தேவையான சட்ட நடவடிக்கை எடுத்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை அனுமதிப்பத்திர கட்டணம் செலுத்தாத தரப்பினரிற்கு வழக்கு தாக்கல் செய்து கட்டணம் அறவிடுவதென. | அனுமதிப்பத்திர கட்டணத்தை சட்ட, விதிகளின் பிரகாரம் அறவிட வேண்டும். |

**(உ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 184,551,257 ஆன நீர் வருமான நிலுவை காணப்பட்டதுடன், அவற்றில் ஒரு அலகின் நிலுவை ரூபா 100,000 இனை விஞ்சிய 179 நீர் பாவனையாளர்களிடம் இருந்து ரூபா 80,653,971 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை சேகரிக்க துண்டிப்பு செயன்முறையை தொடர்ந்து செயற்படுத்துவதென. | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் நகர கழிவுநீர் கருத்திட்டத்தின் கீழ் 4206 பாவனையாளர்களிடமிருந்து 03 ஆண்டுகளிற்கான கூட்டுத் தொகை ரூபா 95,525,371 ஆன நிலுவை கட்டணம் அறவிட்டிருக்கவில்லை. | நீர் தொடர்பை துண்டிப்பதன் மூலம் நிலுவை தொகையை அறவிட நடவக்கை எடுப்பதென. | நிலுவை தொகையை அறிவட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் 1,719 அறிவித்தல் பலகைகளிற்குரியதாக ரூபா 34,351,290 ஆன நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட நடவக்கை எடுப்பதென. | நிலுவை தொகையை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஆண்டு 02 இற்கு அதிக காலமாக நிலவிவரும் 17 நிறுவனங்களில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 845,761 ஆன குப்பை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட நடவக்கை எடுப்பதென. | குப்பை கட்டணத்தை காலரீதியாக அறவிட வேண்டும். |
| (v) | 1,321 நபர்களிடமிருந்து 03 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலுவை ரூபா 38,730,686 ஆன முச்சக்கர வண்டி அனுமதிப் பத்திர கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை முச்சக்கர வண்டி அனுமதிப் பத்திர கட்டணத்தை அறவிட நடவக்கை எடுப்பதென. | முச்சக்கர வண்டி கட்டணத்தை காலரீதியாக அறவிட வேண்டும். |
| (vi) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்த 2023 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 5,381,772 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 138,656,299 ஆனது | இத் தொகையை அறவிட நடவக்கை எடுப்பதென. | நிலுவை தொகையை அறிவட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

மாநகர சபை கட்டளை சட்டத்தின் 04 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபை மற்றும் கண்டி மாநகர சபை ஒன்றிணைந்து கழிவு நீர் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு 2021 நவம்பர் 17 திகதி உடன்படிக்கை செய்திருந்ததுடன், ஜய்கா கருத்திட்டத்தின் கீழ் ரூபா 17 மில்லியன் மற்றும் இலங்கை அரச நிதி ரூபா 4,060 மில்லியன் ஈடுபடுத்தி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த கருத்திட்டம் 04 பொதிகளை கூடிதுடன், இதன் 03 பொதிகளின் கீழ் 9,205 வீட்டு கழிவு நீர் தொடர்புகளும், 39 நிறுவனங்களின் கழிவு நீர் இணைப்புகளையும் வழங்க திட்டமிட்டிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரை 3,700 வீட்டு இணைப்புகள் மாத்திரம் தொகுதிக்கு இணைக்கப்பட்டிருந்தன. இந்த கருத்திட்டம் கண்டி நகரை அன்மித்த பொது மக்களின் வாழ்கை நிலையை, | ஜய்கா கடன் உதவி இடைநிறுத்தப்பட்டதன் மீது வீட்டு இணைப்பு வழங்கல் நின்றுள்ள போதும், மாநகர சபையின் செலவில் இணைப்பை வழங்க நடவடிக்கை எடுப்பதென. | கருத்திட்டத்தை விரைவில் முடிவுறுத்தி எதிர்பார்த்த நோக்கை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுகாதார மற்றும் நலன்புரியை மேம்படுத்தல் எனும் நோக்கம் உள்ளடங்களாக பல நோக்கங்களை முற்படுத்தி செயற்படுத்தப்பட்டுள்ள போதும், திட்டமிட்ட கழிவு நீர் தொடர்புகளை வழங்கியிருக்கவில்லை. | | |
| (ஆ) | கொஹாகொட கழிவு கொட்டிலில் கட்டிடம் மற்றும் இயந்திர உபகரணங்களை பொருத்துவதற்கு பாரிய மூலதன கிரயமொன்றை செய்திருந்த போதும், இயற்கை பசளை உற்பத்தியை குறைத்து 2023 திசெம்பர் 12 திகதி முதல் 2024 மார்ச் 31 திகதி வரையான காலத்தினுள் ரூபா 3,142,641 செலவிட்டு 693.74 டொன் கழிவுகள் குண்டசாலை பிரதேச சபைக்கு போக்கு வரத்து செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, கொஹாகொட கழிவு கொட்டிலில் உற்பத்தி செய்த ரூபா 4,738,680 ஆன 470,488 கிலோ கிராம் பசளை மற்றும் உக்கலடையாத கழிவுகளினால் உற்பத்தி செய்த ரூபா 2,092,282 ஆன 14,111 கிலோ கிராம பிளாஸ்டிக் கட்டிகளை விற்பனை செய்ய பொருத்தமான வேலைத் திட்டமொன்றை தயாரிக்காது கழிவுக் கொட்டிலில் குவிக்கப்பட்டிருநதன. | தினந்தோறும் 60 டொன் அளவான உக்கலடையும் கழிவுகள் கொஹாகொடவிற்கு அனுப்பப்படுவதுடன், அவற்றில் தற்போது காணப்படும் இயற்கை பசளை கொட்டிலிற்கு 25 டொன் அளவு அனுப்பப்படுகிறது. எஞ்சுகின்ற உன்னலடையும் கழிவுகளிலிருந்து 15 டொன் அளவு திகன அளுத்வத்தவிற்கு பணம் செலுத்தி அனுப்பப்படுகின்றது. உற்பத்தி செய்யப்படும் இயற்கை பசளை மற்றும் பிளாஸ்டிக் கட்டிகளை விற்பதற்கு வழங்கல் பிரிவினால் விலைமனு கோரி தேவையான நடவடிக்கை எடுத்த போதும் உலகம் முழுவதும் பரவிய கொரோனா தொற்று காரணமாக கொள்வனவு செய்தவற்கு உரிய கொள்வனவாளர்கள் முன்வராததன் காரணமாக இந் நிலைமை ஏற்பட்டுள்ளதென. | சபைக்குரிய கழிவுகளை முகாமைத்துவம் செய்யவும், உற்பத்தியை விற்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கண்டி தளதா வீதியில் இலக்கம் 74 இஸ்மயில் கட்டிடத்தை வெளித்தரப்பினரிற்கு குத்தகை வழங்கி 2015 ஆண்டு முதல் இதுவரை ரூபா 55 மில்லியன் தொகையை அறவிடாதது தொடர்பாக நி.பி.104(4) விசாரணை அறிக்கை 2023 ஜுலை 12 விநியோகிக்கப்பட்டு இருந்ததுடன், இந்த அறிக்கையில் விசாரணை | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவிடுவதென. | விசாரணை அறிக்கையின் கட்டளை பிரகாரம் தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையின் பரிந்துரையாக ரூபா 55 மில்லியன் தொகையை பொறுப்பு வாயந்த தரப்பினரிடமிருந்து அறவிடவும், அந்த அலுவலரிற்கு எதிராக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளவும் கட்டளை இடப்பட்டிருந்த போதும், அக் கட்டளை செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | | |
| (ஆ) | 2007 ஆண்டில் கண்டி மாநகர சபைக்கு சொந்தமான நூலகம் தீபற்றியது தொடர்பாக மேற்கொண்ட நி.பி.104(4) விசாரணையின் பிரகாரம், அறவிட வேண்டிய ரூபா 31,250,000 தொகையை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிட்டிருக்கவில்லை. | இற்காக தரப்பினர் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளனர். அந்த வழக்கு முடிவடைந்தவுடன் தேவையான நடவடிக்கைள எடுப்பதென. | நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2017 ஆண்டில், கண்டிளிலிருந்து கடுகஸ்தொடை வரை பிரதான பாதைக்கு அன்டியதாக நீர் குழாய் புதைக்கும் கருத்திட்டத்தின் பொறியியலாளர் மதிப்பீட்டை விஞ்சி டென்டர் ஒப்படைத்து ரூபா 86,668,189 ஆன நட்டம் மற்றும் நீர் குழாய் உபகரணங்கள் இறக்குமதி செய்திருக்கையில், இந்த உபகரணங்களை பரீட்சிப்பதற்காக அலுவலர்களிற்கு வெளிநாடு செல்ல மேற்கொண்ட செலவிற்காக ரூபா 1,500,000 ஆன ஒழுங்கீகம் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும், இது தொடர்பாக நி.பி.104(3) மற்றும் நி.பி.104(4) விசாரணை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி.104(4) பொது 284 படிவம் கிடைத்துள்ள போதும், அது ஒழுக்காற்று அதிகாரியின் கையொப்பமின்றி கிடைத்துள்ளதுடன், அது தொடர்பாக வினவி 2024.05.29 திகதி அனுப்பியுள்ளதாகவும், ரூபா 1,500,000 தொகையை ஒப்பந்த நிறுவனத்திற்கு செலுத்தவுள்ள இறுதி பட்டியலிலிருந்து குறைத்துக் கொண்டு செலுத்த அவர்கள் இணங்கியுள்ளனர். இந்த கருத்திட்டத்தை கண்டி மாநகர சபைக்கு ஒப்படைத்தற்கு இடையே சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளதால், அதற்காக தாமதக் கட்டணமாக ரூபா 5,052,673 தொகை இறுதிப் பட்டியலிலிருந்து பதிவழிப்பது தொடர்பாகவும் மாகா நிறுவனம் இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளதென. | நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கண்டி மாநகர சபைக்கு சொந்தமான கெப்படிபொல, மெனிக்கும்புர மற்றும் மத்திய பொது சந்தை இறைச்சிக் கடை, ஆகிய வியாபார கட்டிடத் தொகுதிகளில் 31 கடைகளிலிருந்து கடை வாடகை அறவிடாது போலியான பற்றுச் சீட்டு இலக்கமிட்டு கடை வாடகை கிடைத்ததாக கடை வாடகை பதிவேட்டில் குறிப்பிட்டு 2018 முதல் 2023 ஜுலை 31 வரையான காலத்தினுள் ரூபா 8,277,600 தொகை ஒழுங்கீனம் செய்யப்பட்டிருந்தது. | நி.பி.104(4) விசாரணை மேற்கொள்ள வேண்டியது மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களம் ஆகையால், அதற்குரிய நி.பி.104(3) மேற்கொண்டு குறித்த அறிக்கை உள்ளூராட்சி திணைக்களத்திற்கு 2023.10.25 திகதி அனுப்பியுள்ளதென. | ஒழுங்கீனம் செய்யப்பட்டதனை மேற்பார்வை செய்யாத அலுவர்களை இனங்கண்டு இழக்கப்பட்ட வருமானத்தை அறவிட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கண்டி மாநகர சபைக்கு சொந்தமான மெனிக்கும்புர, கெப்படிபொல, போகம்பர மற்றும் ஜோஜ். ஈ.த சில்வா ஆகிய 04 வியாபார கட்டிடத் தொகுதிகளில் 18 கடைகளின் குத்தகை உரிமையை ஒப்படைக்கும் போது அறவிட வேண்டிய வாடகையை அறவிட்டதாக போலியான பற்றுச் சீட்டுக்களை தயாரித்து பற்றுச் சீட்டுக்கள் இல்லாது கடைகளை ஒப்படைத்தல் மற்றும் சுகாதார செயற்குழுவினதும் பொது சபையின் அங்கீகாரமின்றி கடைகளை ஒப்படைத்ததில் பெற்றுக் கொள்ள வேண்டிய முற்பணத்தை சபை வருமானத்திற்கு செலவு வைக்காது, கூட்டுத் தொகை ரூபா 13,593,790 ஆன ஒழுங்கீனம் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக நி.பி.104(4) விசாரணை மேற்கொண்டு நட்டத்தை அறவிட மற்றும் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க செயற்பட்டிருக்கவில்லை. | நி.பி.104(4) விசாரணை மேற்கொள்ள வேண்டியது மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களம் ஆகையால், அதற்குரிய நி.பி.104(3) மேற்கொண்டு குறித்த அறிக்கை உள்ளூராட்சி திணைக்களத்திற்கு 2024.04.22 திகதி அனுப்பியுள்ளதென. | ஒழுங்கீனம் செய்யப்பட்டதனை மேற்பார்வை செய்யாத அலுவர்களை இனங்கண்டு இழக்கப்பட்ட வருமானத்தை அறவிட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மாநகர சபையில் காசு பொறுப்பேற்கும் அலுவலர் 02 நாட்களில் சேகரித்த ரூபா 5,157,042 தொகையை வங்கியில் இடாது தவறாக பயன்படுத்தியிருந்தார். இது தொடர்பாக நி.பி.104(4) விசாரணை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்க செயற்பட்டிருக்கவில்லை. | நி.பி.104(4) விசாரணை மேற்கொள்ள வேண்டியது மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களம் ஆகையால், அதற்குரிய நி.பி.104(3) மேற்கொண்டு குறித்த அறிக்கை உள்ளூராட்சி திணைக்களத்திற்கு 2024.02.07 திகதி அனுப்பியுள்ளதென. | காசை தினந்தோரும் வங்கியிலிடுவதனை பரீட்சிக்காத அலுவலர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கண்டி மாநகர சபைக்கு சொந்தமான மத்திய சந்தை இடவசதி, குட்செட் கீழ் மாடி, கொஹாகொட, கடுகஸ்தொட பாதை, புகையிரத பாதை A மற்றும் B, தெய்யன்னேவெல, தங்கொள்ள மற்றும் அருப்பல ஆகிய வியாபார கட்டிடத் தொகுதிகளின் கடையறை வாடகை பதிவேடுகளின் காலாண்டின் காலாண்டிற்கு, ஆண்டின் ஆண்டிற்கு, கடை வாடகை பதிவேட்டை சமப்படுத்தி, மீதியை முன்கொண்டு செல்லும் போது, போலியான குறிப்பு இட்டு மற்றும் வருமானத்தை பில்லிடாது 2016 ஆண்டு முதல் 2023 ஆகஸ்ட் 31 வரையான காலத்திற்குரியதாக ரூபா 1,443,627 ஆன ஒழுங்கீனம் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக நி.பி.104(4) விசாரணை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க செயற்பட்டிருக்கவில்லை. | நி.பி.104(3) விசாரணை பூரணப்படுத்தப்பட்டு 2024.01.12 திகதி உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆரம்ப விசாரணை மேற்கொள்ளுமாறு 2023.10.27 திகதி உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நி.பி.104(4) விசாரணை குழுவை நியமித்து ஒரு மாதத்தினுள் விசாரணை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதென. | மாநகர சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை குறித்த அலுவலரிடமிருந்து அறவிடவும், ஒழுக்காற்று செயற்பாடுகளை எடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | மாநகர சபையின், ஆரம்ப மட்ட (கலைஞர் அல்லாத) தொழிலாளர்கள் 2019 ஏப்ரல் 10 திகதி முதல் 2019 ஆகஸ்ட் 08 வரை 04 மாதங்கள் கடமையாற்றி கடமையை விட்டுச் சென்றிருந்தனர். இந்த தொழிலாளர்களிற்கு 2019 ஆகஸ்ட் 08 திகதி முதல் 2023 ஆகஸ்ட் வரை 04 ஆண்டுகள் சம்பளம் கணக்கிட்டு ரூபா 1,792,460 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. சம்பள பட்டியலில் "இடமாற்றம்" எனக் குறிப்பிட்டுள்ள போதும், சம்பளத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்காத காரணத்தால் மாநகர சபை நிதியத்திற்கு நட்டம் ஏற்படுத்தப்பட்டு இருந்தது. | நி.பி.104(4) விசாரணை மேற்கொள்ள வேண்டியது மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களம் ஆகையால், அதற்குரிய நி.பி.104(3) மேற்கொண்டு குறித்த அறிக்கை உள்ளூராட்சி திணைக்களத்திற்கு 2023.10.27 திகதி அனுப்பியுள்ளதென. | கவனயீனமாக செயற்பட்ட அலுவலரினால் மாநகர சபைக்கு இழக்கப்பட்ட வருமானத்தை அறவிடவும், ஒழுக்காற்று செயற்பாடுகளை எடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

### 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கண்டி மாநகர சபைக்கு சொந்தமான நகர வாகன தரிப்பிட மேற்பகுதியில் (சஹஸ் உயன) 100 வியாபார கூடங்களை செயற்பாட்டு வாடகை கொள்வனவின் கீழ் 15 ஆண்டுகளிற்கு குத்தகை வழங்க 2023 மே 12 திகதி மேற்கொண்ட டெண்டர் கோரிக்கையின் பிரகாரம், 02 விலைமனுக்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், | இந்த எடலன்டா கம்பனியினால் முன்வைக்கப்பட்ட கையொப்பம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட போதும், இறுதி பெறுபேராவது ஆரம்ப தகைமையை | டெண்டர் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு பொறுப்புடன் செயற்பட்டு போலியான ஆவணங்களை இனங்கண்டு சட்டத்தின் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | மறுக்கப்பட்ட டென்டர் பத்திரங்கள் போலியாக தயாரிக்கப்பட்டவை என அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, மாநகர சபை கட்டளை சட்டத்தின் 40(1)(ஊ) பிரிவின் பிரகாரம், விடய பொருப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது 100 வியாபார கூடங்கள் நீண்ட கால குத்தகை அடிப்படையில் 15 ஆண்டுகளிற்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தன. இந்த வியாபார கூடங்களிலிருந்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம், வாடகை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பூர்த்தி செய்யாததனால் இந்த மனுதாரின் விலைமனு முன்வைத்தல் மறுக்கப்பட்டுள்ளதென. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இறைச்சிக் கடையறைகளை ஒரு ஆண்டிற்கு குத்தகை வழங்க வேண்டிய போதும், மெனிக்குபுர வியாபார கட்டிடத் தொகுதியில் ஆட்டிறைச்சிக் கடையறை 2018 ஏப்ரல் 01 முதல் 2034 திசெம்பர் 14 வரை 16 ஆண்டுகளிற்கு குத்தகை வழங்கியதில் வருடாந்தம் பெற்றுக் கொள்ள இயலுமாக இருந்த டென்டர் கட்டண கூட்டுத் தொகை ரூபா 2,350,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | 2018.02.23 இன் 2418 இலக்க தீர்மானத்தின் மூலம் ரூபா 153,000 தொகைக்கு ஓராண்டு காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் உடன்படிக்கை செய்யும் போது 05 ஆண்டுகளிற்கு கைச்சாத்திட்டு, 10 ஆண்டுகளிற்கு டென்டர் காலத்தை நீடித்துள்ளதென. | இறைச்சிக் கடைகளை வருடாந்தம் குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய சந்தையின் குத்தகை காலம் முடிவடைந்த 10 இறைச்சிக் கடையறைகளில் இருந்து 2023 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 1,293,638 ஆன டென்டர் தொகை மற்றும் ரூபா 559,342 ஆன கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய விடயத்தை ஏற்றுக் கொள்வதுடன், இந்த நிலுவையை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதென. | நிலுவை தொகையை அறவிட வேண்டும். |
| (ஆ) | கெப்படிபொல வியாபார கட்டிடத் தொகுதியின் 8/34, 8/35 மற்றும் 8/36 ஆகிய 03 கடைகளையும் 2018 ஆண்டில், ஓராண்டு காலத்திற்கு டென்டர் கோரியிருந்த போதும், 2018 பெப்ரவரி முதல் மீளாய்வாண்டு இறுதி வரை டென்டர் கோராமல் அந்த குத்தகைதாரரிற்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே, வாடகை அறவிடாது இலக்கம் 8/33 கடையறையையும், இந்த குத்தகைதாரரிற்கு இனுமதியின்றி பயன்படுத்த இடமளிக்கப்பட்மு இருந்ததுடன், இந்த 04 கடையறைகளையும் ஒன்றுசேர்த்து | சட்ட நடவடிக்கை எடுக்கவில்லையென. | ஓராண்டிற்கு குத்தகை வழங்கிய கடையறைகளை குத்தகை உடன்படிக்கையின்றி நடாத்திச் செல்வதால், மற்றும் கடையறைகளின் கட்டமைப்பை மாற்றியுள்ளதால், கடைகளை சபைக்கு சுவீகர்த்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுவர்களை உடைத்து கட்டமைப்பை மாற்றி உணவு விற்பனை செய்யும் வியாபாரமொன்றை உடன்படிக்கை செய்யாது நடாத்திச் செல்ல் இடமளிக்கப்பட்டிருந்தது. இந்த வியாபாரத்தின் உணவு சமைப்பதற்கு போகம்பர வியாபார கட்டிடத் தொகுதயின் பீ 09, 10, 11 ஆகிய 03 கடையறைகளையும் முறையின்றி வழங்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக இந்த குத்தகைதார் இங்கு இலக்கம் 8/28, 8/29 மற்றும் 8/30 ஆகிய 03 கடையறைகளையும் உப குத்தகை பெற்று சுவர்களை உடைத்து கட்டமைப்பை மாற்றி, நடாத்திச் சென்ற போதும், இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | மாநகர சபைக்கு சொந்தமான டொரின்டன் ஒழுங்கையின் வியாபார கட்டிடத் தொகுதி மேல் மாடியில் கடை நிர்மாணிக்க குத்தகைதாரரிற்கு வழங்கி, காணி குத்தகையாக கருதி 24 அறைகளிற்கு காணிக் குத்தகை அறவிட்டிருந்ததுடன், 23 ஆண்டுகளாக மதிப்பிடாது பழைய குத்தகை வாடகை அறவிடப்பட்டு வந்தது. அவ்வாறே, மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை இந்த 24 கடையறைகளிலிருந்தும் ரூபா 2,044,910 ஆன நிலுவை குத்தகை மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட நடவக்கை எடுக்கப்பட்டு வருவதனெ. | கடையறைகளை மதிப்பிட்டு காலரீதியாக குத்தகை அறவிட வேண்டும். |
| (ஈ) | கண்டி மாநகர சபை மற்றும் கண்டி ஹோடல் கம்பனிக்கிடையில் ஏற்பட்ட இலக்கம் L 5664 இலக்க வழக்கு தீர்ப்பின் பிரகாரம், குவின்ஸ் ஹோடலின் 03 காணித் துண்டுகளின் உரிமை மாநகர சபைக்கு உரித்தாகி இருந்தன. இந்த ஹோடல் வளவை 2011 ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2011 மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், அதற்கு ஒப்பாக அதிகரிப்பை கவனத்திற் கொள்ளும் போது 1986 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையான காலத்திற்காக ரூபா 46,395,250 வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குவின்ஸ் ஹோடலினால் கண்டி மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுத்து வருவதாகவும், எதிர்காலத்தில் நிலுவையை அறவிட மீண்டும் செயற்படுவதாகவும், அவ்வாறு அறவிட இயலாதெனில், சட்ட நடவடிக்கை எடுக்க செயற்படுவதெனெ. | குத்தகை தொகையை செலுத்துவதில்லை எனில், சட்ட நடவடிக்கை எடுக்கவும், உடமையை சுவீகரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கண்டி ஸ்ரீமத் குடா ரத்வத்தே மாவத்த 51/2 இலக்கம் GVR இலக்கை தனியார் கம்பனிக்கு சொந்தமான மாடிவீட்டு கட்டிடத் தொகுதியின் 93 வீட்டு அலகுகளிற்காக நிர்மாண அங்கீகாரம் மற்றும் அதன் திட்டம் பிரகாரம், நிர்மாணம் பூர்த்தியானதாக இணக்கப்பாட்டு சான்றிதழ் விநியோகித்த பின்னர் ஆதன உரிமையாளரின் கோரிக்கையின் பெயரில் அனைத்து வீட்டு | சபைக்கு வருமானம் இழக்கப்படவில்லை எனவும் தவறான பில்லிடல் இடம்பெற்றுள்ளது எனவும் அந்த தவறான பில்லிடலை பதிவழிக்க 2023 ஆகஸ்ட் 16 இன் 407 இலக்க யாப்பு | மதிப்பீட்டு அறிவித்தல் ஒப்படைத்த பின்னர் அறவிட்டு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதனால், வீதவரி அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலகுகளிற்கும் நகர மதிப்பீட்டு அலகினால் வழங்கியிருந்த மதிப்பீட்டுடன் புதிய இலக்கம் வழங்கி 2018 ஆண்டு முதல் வீதவரி பதிவேட்டில் பதிந்து மதிப்பீட்டு அறிவித்தல் வழங்கியிருந்த போதும், பிடியாணை கட்டணத்துடன் ரூபா 16,385,668 நிலுவை வீதவரி மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் பொது விடயங்கள் தொடர்பாக நிலையான குழு மற்றும் முகாமைத்துவ குழு பரிந்துரை பிரகாரம் மதிப்பிற்குரிய ஆளுனர் அவர்களிற்கு அனுப்ப தேவையான நடடிக்கை எடுத்து வருவதென. | |
| (ஊ) | கண்டி மாநகர சபைக்கு சொந்தமான கினிஹிரிய கிராமத்திற்கு அருகில் துனுமடலாவ வன காப்பிடத்திற்கு சொந்தமான குத்தகை அடிப்படையில் வழங்க உத்தேசிக்கப்பட்ட காணியொன்று தேசிய கட்டிடங்கள் ஆராய்சி நிறுவனத்தின் பிரகாரம், குடியிருப்பிற்கு பொருத்தமற்றதென குறிப்பிட்டுள்ள போதும், அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேசிய கட்டிடங்கள் ஆராய்சி நிறுவனத்தின் அறிக்கை கிடைத்த பின்னர் அந்த பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவ குழு தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதென. | தேசிய கட்டிடங்கள் ஆராய்சி நிறுவனத்தின் (NBRO) அறிக்கை பிரகாரம், இந்த 02 காணிகளையும் வதிவிட பயன்பாட்டிற்கு பொருத்தமற்றதென அறிக்கை இட்டுள்ளதால், இந்த கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய சந்தையில் இடவசதி ரூபா 1,000 மாதாந்த வாடகைக்கு 113 வியாபாரிகளிற்கு குத்தகை வழங்கியிருந்த போதும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை இந்த இடவசதிகளிலிருந்து ரூபா 13,613,666 குத்தகை தொகை அறவிட்டிருக்கவில்லை. அவ்வாறாயினும், அந்த வியாபாரிகள் இந்த இடவசதியை ஒரு நாளைக்கு ரூபா 300 இலிருந்து ரூபா 500 இடையிலான வீச்சளவிலான பெறுமானத்திற்கு வேறு நபர்களிற்கு உப குத்தகை வழங்கி வருமானம் ஈட்டிய போதும், மாநகர சபைக்கு அறவிட வேண்டிய நிலுவை தொகையை அறவிட எவ்வித செயற்பாடுகளையும் பின்பற்றியிருக்கவில்லை. | உப குத்தகை வழங்கப்பட்டிருப்பின், உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதுடன், நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை குத்தகை தொகையை காலரீதியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | போகம்பர வியாபார கட்டிடத் தொகுதியின் B, C, D பகுதிகளில் கடையறைகள் எவ்வித அங்கீகாரமும் இன்றி 2019 செப்டம்பர் 30 திகதி முதல் பில்லிடலை நிறுத்தியிருந்த போதும், பரீட்சிப்பிற்கு உட்பட்ட 18 கடையறைகளிலும் வியாபாரம் மேற்கொள்ளப்படுவதாக அவதானிக்கப்பட்டதால், 2019 ஒக்டோபர் 01 முதல் 2023 ஆகஸ்ட் 31 வரையான | பில்லிடலை ஆரம்பிப்பதற்காக குழு தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | கடையறைகளை திருத்தி குத்தகை தொகை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலத்தினுள் 20 கடையறைகளிலிருந்து ரூபா 1,612,500 வருமானம் மாநகர சபை நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மாநகர சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள பிரபல்யமான 03 வியாபாரங்களில் வீதவரி அறவிடுவது தொடர்பில் மேற்கொண்ட மாதிரி பரீட்சிப்பின் போது, பௌதீக மாற்றங்களை கவனத்திற் கொள்ளாது வீதவரி அறவிட்ட காரணத்தால், 2012 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையான காலத்தனுள் ரூபா 3,186,036 வீதவரி வருமானம் மாநகர சபை நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | இக் குறைபாட்டை சீராக்க நடவடிக்கை எடுப்பதென. | பௌதீக மாற்றங்களை கவனத்திற் கொண்டு வீதவரி அறவிட வேண்டும். |
| (ஈ) | மாநகர சபைக்கு சொந்தமான உயர் வணிகப் பெறுமதியுடைய காணிகளை குத்தகை வழங்க இலக்கம் 2013/06 கொண்ட சுற்றறிக்கையையும் வெளியிட்டு அதற்காக பின்பற்ற வேண்டிய முறைமையையும் அறிமுகம் செய்துள்ள போதும், மாநகர சபைக்கு சொந்தமான 09 நகர பிரதேசங்களில் 790 காணித் துண்டுகளில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் காணி பயன்படுத்தப்பட்டு வந்த போதும், அந்த காணிகளை மதிப்பிட்டு குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்காததால் பாரிய வருமானம் மாநகர சபையிற்கு இழக்கப்பட்டிருந்தது. | காணிகளை மதிப்பிட்டு உடன்படிக்கை கைச்சாத்திட்டு குத்தகை வழங்க நடவடிக்கை எடுப்பததென. | காணியை மதிப்பிட்டு குத்தகை வழங்கி வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மாநகர சபைக்கு சொந்தமான 05 அங்கங்களுடன் கூடிய நகர வாகன தரிப்பிடத்தின் மேல் மாடி 2022 ஏப்ரல் மாதத்தில் 15 ஆண்டுகளிற்கு செயற்பாட்டு வாடகை கொள்வனவு முறையூடாக குத்தகை வழங்கி இருந்ததுடன், 2022 ஏப்ரல் முதல் 2023 ஒக்டோபர் வரையான காலத்திற்கு உரியதாக ரூபா 3,448,333 குத்தகை வாடகை மீளாய்வாண்டு இறுதியில் அறவிட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டறிக்கை பிரகாரம், நிலுவை தொகை செலுத்துமாறு குத்தகைதாரர் அறிவூட்டப்பட்டுள்ளெதன. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியிற்கு மாதாந்த நீர் கட்டணத்தை கணக்கிடும் போது, செயலிழந்த நீர் மாணி, மூடப்பட்ட மாணி, நீண்டகாலமாக மூடப்பட்டு குடியிருப்பின்றி பரீட்சிக்க முடியாத மாணிகள் போன்ற பல காரணங்களால் நிலையான கட்டணம் அறிவிடும் 1500 ஆன அளவு அவதானிக்கப்படுவதுடன், இந்த அளவு தொடர்ந்து அதிகரிப்பதாகவும் மாநகர சபைக்கு கிடைக்கும் வருமானம் குறைவதாகவும் அவதானிக்கப்பட்டது. | செயலிழந்த மாணி, மூடப்பட்ட மாணிகளிற்காக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதென. | மாநகர சபைக்கு பெறவேண்டிய நீர் வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | ஒரு நீர் பாவனையாளரின் இலக்கம் 3066 கொண்ட நீர் மாணியிலிருந்து ரூபா 1,784,870 நிலுவை காணப்பட்டதால், நீர் மாணி 2016 செப்டம்பர் மாதம் துண்டித்து மீண்டும் 2016 ஒப்டோபர் 10 திகதி நீர் இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. அத்திகதி முதல் பில்லிடல் நிறுத்தப்பப்பட்டு இருக்காததுடன், 2024 ஏப்ரல் 24 திகதி வரை நீர் 1,624,495 லீற்றர்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறாயினும், நிலுவை மற்றும் பில்லிடப்படாத பெறுமதியை அறவிட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது, அந்த பாவனையாளரிற்கு இலக்கம் 3065 மற்றும் இலக்கம் 13137 கொண்ட நீர் மாணி 02 இலிருந்து நீர் இணைப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றின் கூட்டுத் தொகை ரூபா 4,642,624 நீர் கட்டணம் மீளாய்வாண்டு இறுதி வரை அறவிட்டிருக்கவில்லை. | ஸ்ரீ தலதா மாளிகையில் நீர் வழங்கலிற்காக உரிய பட்டியலை மத்திய மாகாண சபையினால் அறிவிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.7 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புகையிரத நிலைய பாதை புதிய வியாபார கட்டிடத் தொகுதியில் 5582 அடி அளவிலான பகுதியொன்று மேலதிக வகுப்பு நடாத்தும் வியாபார நிலையமொன்றிற்காக 05 ஆண்டு காலத்திற்காக தற்காலிகமாக குத்தகை வழங்க தீர்மானித்திருந்த போதும், 2023 ஆண்டில் எவ்வித பணிக்காவும் பயன்படுத்தாத காரணத்தால் சபை தீர்மானித்த குறைந்த பட்ச விலைமனு பிரகாரம் மாதாந்தம் ரூபா 175,000 வீதம் ரூபா 2,100,000 ஆன வருமானம் சபை நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | 2023.06.28 திகதி இலக்கம் 195 கொண்ட முகாமைத்துவ தீர்மானத்தின் மூலம் தேவையான வசதிகளை தயாரித்து கண்டி புகையிரத நிலைய பாதை புதிய வியாபார கட்டிடத் தொகுதியின் மேல் மாடியில் மேலதிக வகுப்பு நடாத்திச் செல்லும் வியாபாரத்திற்காக குத்தகை வழங்க தீர்மானித்த போதும், அந்த உத்தேசம் செயற்படவில்லயென. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை பயன்படுத்தி வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான கூட்டுத் தொகை ரூபா 22,946,987 ஆன 09 வாகனங்கள் 06 ஆண்டுகளாக விளைவற்று நிலவிய போதும், திருத்த அல்லது ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதர்காலத்தில் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க செயற்படுவதென. | வாகனங்களை ஆக்கவூர்வமாக பயன்படுத்த வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான நீர் பவுசர் ஒன்றை ரூபா 729,690 தொகை செலவிட்டு திருத்தியிருந்த போதும், அந்த பவுசர் ஓட்ட நிலையில் இல்லாது 03 ஆண்டு | எதர்காலத்தில் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க செயற்படுவதென. | வாகனங்களை ஆக்கவூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

காலமாக இயந்திர வேலைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய சந்தை, மத்திய சந்தை மரக்கறி விற்பனை செய்யும் பகுதி மற்றும் டொரின்டன் ஒழுங்கை வியாபார கட்டிடத் தொகுதி அபிவிருத்தி செயற்பாடுகள் பல ஆண்டுகளாக மேற்கொண்டிருக்காத காரணத்தால், பாவனையாளர்கள் மற்றும் வியாபாரிகள் அசவ்கரியத்திற்கு ஆலாகியிருந்தனர். | எதர்காலத்தில் திருத்த வேலைகளை செய்ய நடவடிக்கை எடுப்பதென. | விரைவில் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.9 கருத்திட்டம், பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையான காலத்தினுள் நிறைவேற்ற திட்டமிட்ட ரூபா 578,851,567 ஆன 429 கருத்திட்டங்களை மேற்கொண்டு இருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | திட்டமிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும். |

**3.10 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 செப்டம்பர் 05 திகதிய இலக்கம் 1304/18 கொண்ட வர்த்தமானியில் பிரசுறித்த மாநகர சபை துணை சட்டத்தின் III பிரிவின் 04, 06, 07 பிரிவின் பிரகாரம் விலைமனு கோராது அவசர கொள்வனவாக குறிப்பிட்டு 35 சந்தர்பங்களில் ரூபா 3,974,845 செலவில் வாகன உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலே விலைமனு கோரிய 35 சந்தர்பங்களில் 28 சந்தர்பங்களில் விலைமனு முத்திரையிட்ட கடிதக் உறைகளில் இட்டு சமர்பிக்காது கைகளால் பெற்றுக் கொண்டுள்ளதால், அதன் இரகசிய தன்மை பாதுகாக்கப்பட்டு இருக்கவில்லையென கடிதக் கோவை பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் பதில் வழங்க நடவடிக்கை எடுப்பதென. | பெறுகைகள் நடைமுறையை முறையாக செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2003 செப்டம்பர் 05 திகதிய இலக்கம் 1304/18 கொண்ட வர்த்தமானியில் பிரசுறித்த மாநகர சபை அங்கீகரித்த துணை சட்டத்தின் 4, 6, 7 பிரிவின் பிரகாரம் விலைமனு கோராது கேள்வி அழைப்பை தொலைபேசி மூலம் பெற்று மாநகர சபையின் புதிய கேட்போர் கூட திறப்பு விழாவிற்கு மேடை பின்புலம், LED திரை, மேடை ஒளியூட்டல் கண்காட்சி மற்றும் வீடியோ செய்வதற்காக ரூபா 1,557,200 பெறுமதிக்கு மணுதாரர் ஒருவரை தெரிவு செய்து ரூபா 969,975 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பெறுகைகளிற்கு போதிய காலம் இல்லாததால், குறித்த நிறுவனங்களிற்கு தொலைபேசி மூலம் அறிவித்து விலைமனு சமர்ப்பிக்குமாறு அறிவூட்டியதுடன், விலைமனு 2023.12.08 திகதி மு.ப 10.00 இற்கு திறப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள போதும், முத்திரையிட்ட உறைகளில் இட்டு அனுப்புமாறு குறிப்பிட தவறியுள்ளது. சமர்ப்பித்துள்ள விலைகள் சந்தை விலைகளுடன் இணங்குவதுடன், இது தொடர்பான அனுபவமுள்ள மற்றும் கண்டி மாநகர சபைக்கு அருகில் அமைந்துள்ளதால், இந்த நிறுவனத்தை தெரிவு செய்ததென. | பெறுகைகள் நடைமுறையை முறையாக செய்ய வேண்டும். |
| (இ) | கண்டி குளத்தில் படகு சேவையை நடாத்தும் குத்தகை உரிமையை 05 ஆண்டுகளிற்கு ஒப்படைப்பதற்காக டென்டர் கோரி தெரிவு செய்த டென்டர்தாரர் போலியான ஆவணங்களை சமர்ப்பித்த காரணத்தால், டென்டரை புறக்கணித்திருந்த போதும், குறித்த டென்டர்தாரரை கறைநிரற் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அந்த டென்டர்தாரரை கறைநிரற் பட்டியலில் சேர்ப்பதென. | பெறுகைகள் நடைமுறையை முறையாக செய்ய வேண்டும். |

## 3.11 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் சபை நிதி ரூபா 5,443,629 செலவிட்டு நிர்மாணிக்கப்பட்டு வந்த கடுகெலே சனசமூக நிலைய நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம், கருத்திட்ட வேலைகள் 2020 ஒக்டோபர் 13 திகதி ஆரம்பித்து 2021 ஒக்டோபர் 13 திகதி வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டிய போதும், மீளாய்வாண்டு இறுதியில் அதன் வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன. கூட்டாக 12 வேலை விடயங்களில் மேற்கொண்டிருந்த வேலை அளவுகளை விட அதிகமான வேலை | கூடுதலாக செலுத்திய தொகை ரூபா 1,151,993 ஆவதுடன், கூடுதலாக செலுத்திய அத் தொகையை மீண்டும் பெற்றுத் தருமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒப்பந்ததாரரினால் மேற்கொண்ட தொடங்வெல பலநோக்கு கட்டிட நிர்மாண வேலையின் மற்றும் இந்த | மேற்கொள்ளப்படாத வேலைகளிற்கு கொடுப்பனவை பரிந்துரைத்த அலுவலர்களை இனங்கண்டு அந்த அலுவலர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவுகளை குறிப்பிட்டு ரூபா 1,478,703 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | வேலையின் நிறுத்தற் பணத்தினால் அத் தொகையை அறவிடுமாறு கோரப்பட்டுள்ளதென. | |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 7,783,230 செலவில் நிர்மாணித்துக் கொண்டிருந்த தொடங்வெல பலநோக்கு கட்டிட கீழ் மாடி நிர்மாண ஒப்பந்தத்தின் மதிப்பிடப்பட்ட அளவு தயாரிக்கப்பட்டிருக்காததுடன், வேலை விடயம் 06 இல் மேற்கொண்ட அளவை விட அதிகமான வேலை அளவுகளை குறிப்பிட்டு கூடுதலாக ரூபா 939,212 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, வேலை விடயம் இலக்கம் 15 மண் வெட்டுவதற்காக டென்டர்தாரர் ஒரு கன மீற்றரிற்கு ரூபா 2,000 கோரியிருக்கையில், போலியாக ரூபா 20,000 எனக் குறிப்பிட்டு 83.54 கன மீற்றர்களிற்கு ரூபா 18,000 வீதம் ரூபா 1,503,720 தொகையும், வேலை விடய இலக்கம் 76 (R3) இன் கீழ் லீற்றர் 500 பிளாஸ்டிக் நீர் தாங்கியொன்றிற்காக டென்டர்தாரர் ரூபா 15,000 கோரியிருக்கையில், ரூபா 150,000 செலுத்திய காரணத்தால், ரூபா 135,000 கூடுதலாக செலுத்தி ஒழுகீனம் செய்யப்பட்டிருந்தது. | இலக்கம் 2 இன் 2.1 இல் குறிப்பிடப்படும் விதத்தில் இரண்டாம் பட்டியலில் 15 உருப்படிகளிற்கு விலைகள் கூடுதலாக 0 இடப்பட்டு ரூபா 20,000 ஆக குறிப்பிடப்பட்டமை மற்றும் அதனை பட்டியல் பரீட்சிக்கும் போது கவனத்திற் கொள்ளப்படாததால் கூடுதல் கொடுப்பனவு இடம்பெற்றுள்ளது. எனினும் பின்னர் ஒப்பந்ததாரரினால் மூன்றாம் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு அந்த விலைகள் சரிசெய்யப்பட்டுள்ளதென தொழிநுட்ப மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்படும் போதுதிலிருந்தே நீர் தாங்கியின் ஒப்பந்ததாரர் சமர்ப்பித்திருந்த ரூபா 15,000 தொகை ரூபா 150,000 ஆக அச்சிடப்பட்டதால் ஒப்பந்தத்திற்கும் அது ரூபா 150,000 ஆக இடப்பட்டுள்ளது. இதனை மூன்றாம் பட்டியலில் சரிசெய்துள்ளதென. | மேற்கொண்ட வேலைகளிற்கு கொடுப்பனவு செய்ய வேண்டியதெனவும், போலி விலைகளை குறிப்பிட்டு கூடுதல் கொடுப்பனவு செய்த அலுவலர்களை இனங்கண்டு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். நீர் தாங்கியிற்கு கொடுப்பனவு செய்துள்ளது இறுதி பட்டியலின் மூலம் ஆகையால், அதனை சரிசெய்ய முடியாததால், குறித்த அலுவலர்களை இனங்கண்டு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

## 3.12 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் அங்கீகார ஆளணியில் 70 பதவிகளிற்குரியதாக 491 வெற்றிடங்கள் மற்றும் 03 பதவிகளிற்குரியதாக 33 மிகை ஊழியர்களும் நிலவினர். | அரசினால் எடுத்துள்ள கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் அனைத்து ஆட்சேர்ப்புகளையும் தற்காலிகமா இறுத்தியுள்ளதென. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | மத்திய மாகாண அரச சேவை அலுவலர்களிற்கான இடமாற்ற கொள்கை பிரகாரம், ஒரு சேவை நிலையத்தில் 05 ஆண்டுகளை பூர்த்தி | இலங்கை பொறியியல் சேவை அலுவலர்களிற்கு கடந்த 5 ஆண்டுகளினுள் வருடாந்த இடமாற்றம் | இடமாற்ற கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்துள்ள அலுவலர்கள் இடமாற்றத்திற்கு உட்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டு இறுதியில் 48 அலுவலர்கள் 05 ஆண்டுகளிற்கும் 35 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக மாநகர சபையில் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | செயற்படுத்தப்படவில்லை.இலங்கை க ஆயுர்வேத சேவையின் பிரதான ஆயுர்வேத அலுவலர் அப் பதவிக்கு நியமிக்கப்பட்டு குறுகிய காலமாகையால் மற்றும் தற்போது கண்டி மாநகர சபையின் சிரேஷ்ட அலுவலராகையால் சேவை தேவைப்பாட்டின் மீது தொடர்ந்தும் கடமை புரிவதென. | |
| (இ) | 2022 திசெம்பர் 14 இன் 2310/29 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுறிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுயின் செயல் நடைமுறை விதிகளின் XVIII ஆம் அத்தியாயத்தின் 251 பிரகாரம், அங்கீகார இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதும், சபை நியமனம் பெற்ற ஊழியர்கள் மாநகர சபையின் ஏனைய பிரிவுகளிற்கு இடமாற்றம் செய்யாது பல ஆண்டுகளாக ஒரே நிலையத்தில் நிறுத்தி சேவை பெற்றுக் கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | மாநகர சபைக்குரியதாக நியமனம் பெறும் தொழிலாளர் அலுவலர்கள் பிரிவுகளிற்கு இடையே உள்ளக இடமாற்றம் செய்வதனை 2024 ஆண்டில், செய்யவுள்ளதென. | உள்ளக இடமாற்ற முறையொன்றை ஏற்படுத்த வேண்டும். |
| (ஈ) | சேவையை விட்டுச் சென்ற, மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற 110 அலுவலர்களிடமிருந்து ரூபா 10,305,691 ஊழியர் கடன் 02 ஆண்டு முதல் 13 ஆண்டுகளிற்கு இடையிலான காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | சேவையை விட்டுச் சென்ற /மரணித்த/ஓய்வுபெற்ற/ பணித்தடைக்குட்பட்ட அலுவலர்களினது கடன் மீதி அறவிடல் தொடர்பாக சபை அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், 06 ஊழியர்களின் கடன் மீதிகள் பிணையாளர்களிடம் இருந்து அறவிடப்படுவதென. | நிலுவையை அறிவட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.13 வாகனத் தொகுதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழில்நுட்ப வேலைதளத்தின் ஊடாக 2023 ஆண்டில் 03 வாகனங்களிற்காக கிரீஸ் விநியோகிக்கும் போது, அவ் வாகனங்களில் செலுத்திய இயந்திர மணித்தியாலங்களின் பிரகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய கிரீஸ் அளவு 173 கி.கி ஆன போதும், பெற்றுக் கொண்ட கிரீஸ் அளவு 609 கிலோ கிராம் ஆகையால், கிரீஸ் 436 கிலோ கிராம் கூடுதலாக விநியோகித்து ரூபா 2,390,325 தொகை தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுப்பதென. | வாகன வகைகளின் பிரகாரம் தேவையான கிரீஸ் அளவுகளை மாத்திரம் விநியோகிக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நள்ளாலுகையும்

### சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கண்டி கலல்தொர வாய்கால் பிரதேசத்திற்கு மாநகர சபை அதிகார பிரதேச மண் வெட்டுதல், கட்டிட அகற்று பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் வெளியிடுவதன் காரணமாக, மஹவெலி கங்கைக்கு வண்டல்மண் சேறுதல் மற்றும் கலல்தொர மற்றும் ஹாலி வாய்கால்களிற்கு மலசல கழிவுகளை வெளியிடுவதனால், சுற்றாடல் மாசு ஏற்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | குறித்த காப்பிடங்களிற்கு சேதம் விளைவிப்பதை பரீட்சித்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |